**புதுச்சேரி அரசு**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**

புதுச்சேரி, 26.05.2017

**மேல்நிலை சிறப்புத் துணைத் தேர்வு ஜூன்/ஜூலை - 2017**

**செய்திக் குறிப்பு**

நடைபெற்று முடிந்த மார்ச் - 2017 மேல்நிலை பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள்/வருகைப்புரியாதவர்களுக்காக நடைபெறவிருக்கும் **ஜூன்/ஜூலை – 2017, மேல்நிலை சிறப்புத் துணைத் தேர்வெழுத** விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்களிடமிருந்து ஆன்-லைனில் (Online) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் மூலமாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் மூலமாகவும் மட்டுமே ஆன்-லைனில் (Online) விண்ணப்பிக்க இயலும். விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள்/தேர்வு மையங்களுக்கு நேரில் சென்று **29.05.2017 (திங்கட் கிழமை) முதல் 01.06.2017 (வியாழக் கிழமை) வரை** விண்ணப்பதாரர் உரிய ஆவணங்களுடன் நேரில் வந்து ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள் தனியார் கணிணி மையங்கள் (Private Browsing Centres) மூலம் விண்ணப்பிக்க இயலாது.**

**தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை :-**

- விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50 தேர்வுக் கட்டணமும், இதர கட்டணம் ரூ.35 ம் பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.
- தேர்வுக் கட்டணத்துடன் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ. 50/- ம் பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

**தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் (Hall Tickets) விநியோகம் :-**

- **ஜூன்/ஜூலை – 2017, மேல்நிலை சிறப்புத் துணைத்** தேர்வு **வருகிற 23.06.2017 முதல் 06.07.2017 வரை நடைபெறவுள்ளது.**
- தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும். தேர்வர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்துகொள்ளலாம்.

(ஜெ. கிருஷ்ணராஜு)
இணை இயக்குநர்

இந்த செய்தியினை தங்களது நாளிதழ் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஜெ. கிருஷ்ணராஜு)
இணை இயக்குநர்